# சீனாவின் மஞ்சுஸ்ரீ மற்றும் கார்த்திகேயா கடவுள் உருவ அமைப்புக்களின் ஒற்றுமைகள்

{ ஆங்கிலத்தில் மூலக் கட்டுரை :- பீ. என். முக்கர்ஜீ ( B.N. Mukherjee)
*( An Illustration of Iconographic Contact between Karttikeya and Manjusri in China by B.N. Mukherjee from Buddhist Iconography, pp. 138-141)*

*தமிழில் மொழி பெயர்ப்பு :- சாந்திப்பிரியா ( nrj_1945@yahoo.com) }*

சீனாவில் ஷின்ஷி ( Shensi or Shanxi) மாகாணத்தின் அருகில் உள்ள டடாங்க் ( Datong) என்ற இடத்தின் அருகில் உள்ள யுங்கங்க் ( Yun-Kang or Yungang ) மலைப் பகுதியில் உள்ள குகையின் எட்டாம் நுழை வாசலில் அனைவரின் கவனத்தையும் கவரும் வண்ணம் காணப்படுகின்றது ஒரு அற்புதமான ஆண் சிலை. கி.பி. 385-534 அல்லது 550 ஆம் ஆண்டில் ஆட்சி செய்து வந்த வடக்கு – வை- வம்ச ( Wei Dynasty ) மன்னர்களின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்த சிலை அது எனத் தெரிகின்றது . அதற்கு முன் கி.பி. 460 ஆம் நூற்றாண்டில்தான் சிற்பக் கலைத் திறன் அங்கு தோன்ற ஆரம்பித்தன. உயர்ந்த பீடத்தில் அமர்ந்து கொண்டு, வடப்புறத்தில் இருந்து தன்னை நோக்கியபடி அமர்ந்து இருக்கும் மயில் ஒன்றின் மீது தன் கால்களை வைத்தபடி காட்சி தரும் வகையில் அமைந்து உள்ளது அந்த ஆண் சிலை.


சீனாவில் யூன்கங்க் குகையில் ஐந்தாம் நூற்டாண்டின் கார்த்திகேயா மற்றும் மஞ்சுஸ்ரீ சிற்பம்

தன்னுடைய வாயில் உருண்டை வடிவத்தில் எதோ ஒரு பொருளை வைத்திருந்தபடி ஒரு மயில் காட்சி அளிக்க, ஆண் சிலையோ ஐந்து தலைகளைக் கொண்டபடி காட்சி தருகிறது. ஆனால் உண்மையில் அந்த சிலைக்கு ஆறு முகங்கள் உள்ளதாகவே கருத வேண்டும். ஏன் எனில் பார்பவர்கள் கண்களுக்குப் புலப்படாத வகையில் முன் பக்க தலையின் பின்புறம் உட்புறமாக செதுக்கப்பட்டு உள்ளது போல் தெரியும் ஒரு முகத்தையும் சேர்த்துப் பார்த்தால் அதற்கு ஆறு முகமாகின்றது. அந்த சிலைக்கு ஆறு கைகள் உள்ளன. மேல் புறத்தில் உள்ள இரண்டு கைகளிலும் சந்திரனும் சூரியனும் காணப் படுகின்றன. இடப்புறத்து நடுக் கையில் வில் ஒன்று இருக்க, இடப்புறக் கீழ்க் கையில் தன் மார்போடு ஒரு சேவலை அணைத்தபடி இருக்கும்

காட்சியுடன் சிலை வடிவமைக்கப் பட்டு உள்ளது. வலப் புறத்தில் உள்ள கீழ் கை ஒரு முத்திரைச் சின்னத்தைக் வைத்தபடி தொடையைத் தொட்டுக் கொண்டு இருக்க, நடுக்கையோ உடைந்த நிலையில் காணப்படுகின்றது என்றாலும், அந்தக் கையில் அம்பு ஒன்றை, இடது கையில் உள்ள வில்லில் ஏற்றி செலுத்தும் வகையில் வைத்து இருந்திருக்க வேண்டும் என்று தெரிகின்றது.

மலையும், அதில் உள்ள சிலைகளின் அமைப்புக்களையும் நோக்கும் பொழுது அது கார்த்திகேயா என்ற ஸ்கந்தா முருகனையே சார்ந்து இருக்கின்றது என்றே கருத வேண்டி உள்ளது. அந்த ஆண் கடவுளின் சிலையைப் பற்றிக் குறிப்பிடுகையில் அதை பின்புறத்துத் தலை தெரியாமல் வடிவமைக்கப்பட்ட ஆறுமுக கடவுள் என்கின்றனர். அனைத்து புராணக் கதைகளிலும் ஸ்கந்தனுக்கு ஆறு முகம் உள்ளதாகவே கூறப்பட்டு உள்ளன என்பது தெரிந்ததே. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த புத்த மத ஆலயத்தில் அந்தணர்கள் பெரிதும் வணங்கிய இப்படிப்பட்ட ஒரு சிலை இருப்பதைக் கண்டு வியப்படையத் தேவையே இல்லை. ஏன் எனில் குகையின் உட்புறத்தில் மஹேஸ்வரனைக் குறிக்கும் வகையில் சாய்ந்த நிலையில் அமர்ந்து உள்ள மாட்டின் மீது மூன்று தலைகளுடன் உள்ள ஒருவர் உட்கார்ந்தபடி காட்சி தரும் வகையில் மற்றும் ஒரு சிலை காணப்படுகின்றது.

சீனாவில் பொதுவாக நிலவும் புராணக் கதையின் மூலம் , கௌதம புத்தர் சீன மக்கள் முக்தி என்ற மோட்சம் பெறும் வகைக்கான வழி முறைகளைக் கண்டறிந்து அந்த நல்வழி மார்கத்திற்கான போதனைகளை பிரசாரம் செய்யும்படி அனுப்பிய போதிசத்துவ மஞ்சுஸ்ரீ என்பவருக்கும் மயில் வாகனம் இருந்ததாகத் தெரிய வந்தது. மஞ்சுஸ்ரீ அல்லது வென்-ஷு-ஷீ-லீ ( Wen-Shu-Shi-Ii ) என்பவர் ஷின்ஷி (Shensi or Shanxi) என்ற பகுதியில் இருந்த வூ-டை-ஷான் ( Wu-tai-shan ) என்ற இடத்தில்தான் (பஞ்சாஷ்டிரா அல்லது ஐந்து முகமலை என்ற பகுதி) அவதரித்தரித்தார். ஒரு சிலரின் கூற்றின்படி அவருடைய சேவைகள் முதலாம் நூற்றாண்டிலேயே துவங்கி விட்டதாம். அற்புதமான அந்த ஆண் சிலை உள்ள யுன்கங்க் மலைப் பகுதிக் குகைகள் கண்டு பிடிக்கப் படும் முன்பேயே ஷின்ஷி மாகாணத்தில் மஞ்சுஸ்ரீ பெரிய அளவில் அறியப் பட்டு இருந்தவர். எல்லா விதத்திலும் உயர்ந்த அறிவு கொண்ட கடவுளாக கருதப்படும் மஞ்சுஸ்ரீ, அதே அளவில் சீரிய அறிவு ஆற்றலைக் கொண்ட கார்திகேயக் கடவுளுடன் அனைத்து வகையிலும் ஒத்திருப்பதாகவே கருதப் படுகின்றார்.

மஞ்சுஸ்ரீ புத்த மதத்தைச் சேர்ந்த தேவ கணமானாலும், மஞ்சு குமரா என்றும் குமாரபூதா என்றும் அவரைக் கூறுவதின் மூலம், அவருக்கும் குமார கார்த்திகேயருக்கும் உள்ள தொடர்பை ஜாடை மாடையாகக் உறுதி செய்கின்றனர்.

அதுமட்டும் அல்ல கார்த்திகேயாவைப் போலவே மஞ்சுஸ்ரீயும் குமார அவதாரமாகவே காட்டப்படுகின்றார். சாதனமாலா என்ற நூலில் உள்ள தியானா என்ற பகுதியில் மஞ்சு குமாரன் வில்லும் அம்பும் ஏந்தியபடி ( யுங்கங்க் சிலை வடிவம் போல ) இருப்பதாகக் குறிப்பிடப்பட்டு உள்ளது. அங்கு காணப்படும் சில சிலைகளில் மஞ்சுஸ்ரீ - யூன்கங்க் பகுதியில் உள்ள சிலையைப் போல – ஐந்து முகங்களுடன் காணப் படுகின்றார். இவற்றை எல்லாம் நோக்கும் பொழுது மஞ்சுஸ்ரீயும் கார்த்திகேயாவும் மாறுபட்டக் கடவுள்களே என்றாலும் இருவருக்கும் இடையே எதோ ஒரு இனம் புரியாத ஒற்றுமை நிலவுவதாகவேத் தெரிகின்றது.

யுங்கங்க்கில் அந்தக் கடவுள் சிலை கண்டறியப்பட்ட பின் வந்த குப்த மன்னர்களின் ஆட்சி காலத்தில் எழுதப்பட்ட ஆர்ய- மஞ்சுஸ்ரீ- மூலகல்பா என்ற நூலின் மூலமும் இந்த இரு கடவுட்களின் வடிவமைப்புக்களில் நிறைய ஒற்றுமைகள் இருப்பதாக தெரிய வந்தன. அதனால்தான் ஐந்தாம் நூற்டாண்டின் முன்போ அல்லது இறுதியிலோ (- யுங்கங்கில் சிலை கண்டறியப்பட்டக் கால கட்டம் -) ஷின்ஷி மாகாணத்தில் அந்த இரண்டு கடவுட்களுக்கும் எதோ ஒரு விதத்தில் ஒரு தொடர்ப்பு நிச்சயமாக இருந்திருக்க வேண்டும் என்பதில் எந்த விதமான ஐயமும் இருக்க முடியாது. புத்த மதம் பெருமளவில் பரவி இருந்த இடத்தில் உள்ள மலைக் குகையில் இருக்கும் யூன்கங்க் சிலை வடிவமைப்பில் எந்த அளவுக்கு இந்த இரண்டு கடவுட்களின் தோற்றமும் ஒத்து உள்ளது என்பதைக் கூறுவது மிகவும் கடினம். அதே சமயத்தில் மஞ்சுஸ்ரீக்கும் நீலகண்டர் என்ற சிவனுக்கும் இருந்த உறவு அந்த குகையில் உள்ள சிற்பங்கள் மூலம் தெரிய வருகின்றது. நேபாளத்தில் சிவ லிங்கங்கள் பலவற்றில் மஞ்சுஸ்ரீயின் உருவமும் செதுக்கப்பட்டு உள்ளது. அதனால் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். சிவபெருமான் அந்தணர்களினால் பெரிதும் வணங்கப்படும் தெய்வம். ஆகவே மஞ்சுஸ்ரீக்கும் சிவனுக்கும் இருந்ததாக கூறப்படும் உறவு, ஐந்தாம் நூற்றாண்டின் மூன்றாம் பகுதியில் கண்டறியப் பட்ட இரண்டு யுங்கங்க் சிலைகளின் காலத்தை ஒட்டியவையா என்பது தெரியவில்லை. அனேகமாக இதுவும் கார்த்திதேயா மற்றும் மஞ்சுஸ்ரீயின் தொடர்பு குறித்துக் கூறப்படுவதைப் போலவே ஹேஷ்யமாகக் கூட இருக்கலாம். ஒரு சாரர் நம்புவது போல கார்த்திகேயாவுடன் இருந்த தொடர்பினால் கூட மஞ்சுஸ்ரீயும் அவருடைய தந்தையுடன் உறவு வைத்திருந்து இருக்கலாம்.

மற்றும் ஒரு கவனிக்க வேண்டிய விஷயம் என்ன எனில் எப்பொழுதும் கார்த்திகேயாவுடன் சேர்ந்தே காணப்படும் சேவலும் மயிலும், மஞ்சுஸ்ரீ-யுங்கங் சிலைகளுடனும் சேர்ந்து காணப்படுகின்றது. ஆகவே யுங்கங்கில் உள்ள அந்த சிலையை கார்த்திகேயா-மஞ்சுஸ்ரீ என்பதா, மஞ்சுஸ்ரீ-கார்த்திகேயா என்பதா, இல்லை மஞ்சுகுமாரா எனக் கருதலாமா என்பது ஒரு கேள்விக் குறியாக உள்ளது. மேலும்

அங்கு கார்த்திகேயரைப் பற்றிய விவரங்களை முன்னரே தெரிந்து வைத்து இருந்தனரா என்ற உண்மை நிலையும் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இப்படி நிலவிய நம்பிக்கைகள் அனைத்தும் மஞ்சுஸ்ரீயின் அவதாரத்துக்கும் முந்தைய காலத்தில் இருந்தவை. யுங்கங் சிலைகளின் அமைப்பைப் பார்க்கும் பொழுது ஐந்தாம் நூற்றாண்டில் அந்த இடங்களில் கார்த்திகேயரைப் பற்றி நன்கு அறிந்து இருந்தனர் என்பதும் புலனாகின்றது.

சீன நாட்டின் ஷின்ஷி மாகாணப் பகுதிகளில் ஐந்தாம் நூற்றாண்டில் இருந்தவர்கள் கார்த்திகேயரைப் பற்றி அறிந்து இருந்தனர் என்பது உண்மை எனில் நிச்சயமாக அதற்கு முன்பே சீனாவின் மத்திய ஆசியப் பகுதிகளில் அவர் நன்கு அறியப்பட்டு, போற்றப்பட்ட ஒரு கடவுளாகவே இருந்திருக்க வேண்டும். அந்த கால கட்டத்தில்தான இந்திய-ஷின்ஷியின் எல்லைப் பகுதியில் இருந்து கார்த்திகேயரைப் பற்றிய வடிவமைப்புக்கள் அங்கும் பரவி இருந்து இருக்க வேண்டும். இந்திய-இரானிய எல்லைப் பகுதியில் இருந்தே அந்த செல்வாக்கு பரவி இருந்து இருக்க வேண்டும் என்று நம்பத் தகுந்த வகையில் உள்ளன இரானின் மத்திய பகுதிகளிலும் சீனாவிலும் இருந்த கார்த்திகேயரின் சிலைகளில் உள்ள கைகளில் காணப்படும் சந்திர சூரியனின் சின்னங்கள்.

மத்திய ஆசியாவிலும் சீனாவிலும் புத்த மதம் பரவத் துவங்கிய பொழுது மெல்ல மெல்ல கார்த்திகேயா அல்லது மகாசேனா அல்லது குமாரா என்பவர் சிறிய அளவிலும், சில சமயங்களில் பூதகணம் போன்ற உருவமுடன், காக்கும் தேவதையாக ஏற்கப்பட்டு வந்திருக்கின்றார். அதே சமயம் மத்திய ஆசியாவிலும், இந்தியாவிலும் புத்த மத வழி பாட்டுக் கடவுளான மஞ்சுஸ்ரீயின் தோற்றத்தைக் கூட தன்னைப் போலவே தோற்றம் தரும் அளவுக்கு புகழ் பெற்று இருந்தார்.